பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பூமாலை வணிக வளாகங்கள்!



# 40 இடம் பொருள் கலைஞர்







# பூமாலை வணிக வளாகங்கள்

## கிராமப்புற மகளிர் பொருளாதார உயர்வுக்கு வித்து!

*‘இந்தியா, கிராமங்களில் வாழ்கிறது’ என்றார் காந்தி. அந்த கிராமங்களோ அங்குள்ள பெண்களின் பங்களிப்பால் வாழ்கிறது. விவசாயம் தவிர்த்து, கூடை பின்னுதல், பூக்கட்டுதல், காய்கறி விற்றல் முதற்கொண்டு பல்வேறு சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் எல்லாம் பெண்களைச் சார்ந்தே இயங்குகின்றன.*

*கிராமங்களில் பணப்புழக்கச் சுழற்சி, பெண்களை மையமிட்ட ஒன்று. இதை உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கிராமங்களில் உள்ள பெண் தொழில்முனைவோர்கள் தங்கள் பொருட்களைச் சந்தைப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டார். அதன் விளைவாக உருவானவை தான் **‘பூமாலை வணிக வளாகங்கள்’**.*

*2000-ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, சட்டமன்றத்தில் தாக்கல் செய்துபோது, இது தொடர்பான அறிவிப்பைச் செய்தார் முத்தமிழறிஞர்.*

*“பொதுமக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாய விலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத் தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா மாவட்டங்களில் ஏற்படுத்தவும், கிராமப்புறப் பொருட்களுக்குப் ‘பூமாலை’ எனும் வணிகச் சின்னம் உருவாக்கி அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் வரும் நிதியாண்டில் செலவிடப்படும்” என்று அறிவித்தார் கலைஞர்.*

### பொருளாதார சமநிலையில் அக்கறை

*அந்த அறிவிப்பைத் தொடர்ந்து, முதல் **‘பூமாலை’ வணிக வளாகம்**, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் 2000-ஆம் ஆண்டு ஏப்ரல் 9 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

**பூமாலை வணிக வளாகங்களில் கீழ்க்கண்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன:**

சணல், தோல் பைகள் மற்றும் பனை ஓலைப் பொருட்கள், பொம்மைகள், கண்ணாடி வேலைப்பாடுகளுடன் கூடிய சேலைகள், சுடிதார் ஆடைகள், அப்பளம், ஊறுகாய், மசாலா மற்றும் சமையல்பொடிகள், ஊதுவத்தி, சாம்பிராணி, வாசனைத் திரவியங்கள், மண்புழு உரம், சோப்பு, கிளீனிங் பவுடர், ஷாம்பு, பினாயில். உணவுப் பொருட்கள்.

இந்தத் திட்டத்தின் கீழ், கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் மற்றும் கிராமப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியும், அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கான விற்பனையை அதிகரிக்கவும், வாழ்க்கைத் தரம் மேம்படவும் வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

*அப்போது உரையாற்றிய கலைஞர், “இந்தப் பூமாலைத் திட்டம் தொடங்கி வைக்கப்படுகின்ற இடத்தைப் பார்ப்பீர்களேயானால் கிராமப் புறங்களிலே இருந்து வருகின்ற மகளிர், அவர்கள் தாங்களே முன்னின்று தயாரித்த பொருட்களைக் கொண்டு வந்து அவைகளை விற்பனை செய்கின்ற காட்சியைக் காணலாம்.*

*இந்த அரசின் திட்டமே, பொருளாதாரம் வளர வேண்டும், பொருளாதாரத்தில் ஓர் உயர்வு தமிழ்நாட்டில் ஏற்பட வேண்டும் என்றாலும்கூட, நகர்ப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு வராமல் ஒரு சமநிலை ஏற்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி என்ற பெயரால் நகர்ப்புறத்தினுடைய நிலை உயர்ந்து, கிராமப்புறத்தினுடைய நிலை குறைந்துவிடக்கூடாது. அதைச் சமப்படுத்தத்தான் இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் இந்த ஆட்சியிலே நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்” என்றார்.*



### கைவினைப் பொருட்களுக்கு மரியாதை

*அடிப்படையில் பூமாலைத் திட்டம், கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஆகும். கைவினைப் பொருட்கள் என்றால், **‘தஞ்சாவூர் தட்டு’, ‘காமாட்சி விளக்கு’** போன்ற பொருட்கள் அல்ல. அவற்றைவிட மலிவான பொருட்கள்.*

*உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்றால், ஓலைகளினால் செய்யப்படுகின்ற பொருட்கள், மூலிகைகளில் இருந்து செய்யப்படுகின்ற பொடிகள், பல்தேய்க்கின்ற பொருட்கள், சலவைக்கு உகந்த பவுடர்கள், பொம்மைகள், சிறிய சிறிய விளையாட்டுக் கருவிகள் போன்றவை.*

*“இவற்றையெல்லாம் செய்யக்கூடிய திறமை நம்முடைய நாட்டிலே கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு அதிகமாக உண்டு. நான்கு பனை ஓலைகளைக் கொண்டு ஒரு சிறிய கூடையாக முடையக்கூடிய ஆற்றல் இன்று நேற்றல்ல பழங்காலத்திலேயே நம்முடைய கிராமப்புறத்துத் தாய்மார்களுக்கு உண்டு. இப்போது நவீன உலகத்தில் மேலும் அவைகளை நேர்த்தியாகக் கண்ணைக் கவரக்கூடிய அளவுக்கு அந்தப் பொருட்களைத் தயார் செய்யக்கூடிய அந்த வாய்ப்பு, இந்தப் பூமாலை மூலமாகக் கிடைக்கும்” என்று குறிப்பிட்டார் கலைஞர்.*

### கிராமத்துக்கும் நகரத்துக்குமான பாலம்

*இந்தப் பூமாலைத் திட்டம் குறித்து, கலைஞர் மேலும் பேசும்போது, "கிராமப்புறங்களிலே முடங்கிக் கிடந்த பொருளாதார வளர்ச்சி இன்றைக்குத் தட்டி எழுப்பப்பட்டு நகர்ப்புற உதவியோடு, நகர்ப்புற மகளிர் உதவியோடு ‘ஒருவருக்கொருவர் உதவி’ என்ற முறையிலே இவர்கள் குறைந்த விலையிலே பெறுகிறார்கள். மலிவான விலையிலே, வாங்கிப் புசிப்போர் பெறுகிறார்கள். விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட காய்கறிகளுக்கு நல்ல விலையைப் பெறுகிறார்கள், என்ற ஒரு பொருளாதார ஏற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்” என்றார்.*

*எனவேதான், இந்தப் பூமாலைத் திட்டத்தின் கீழ் வணிக வளாகங்களைக் கிராமப்புறங்களில் மட்டும் அமைக்காமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற எல்லா நகர்ப்புறங்களிலும் அமைக்கப்பட்டன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, நகரப் பகுதிகளில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, அவற்றுக்குப் **‘பூமாலை வணிக வளாகம்’** என்று பெயர் சூட்டப்பட்டன.*

*அரியலூர், திருப்பூர் மற்றும் புதிய மாவட்டங்கள் நீங்கலாக, 29 மாவட்டங்களில் பூமாலை வணிக வளாகங்கள் செயல்பட்டு வந்தன. மற்றவை பழுதடைந்து இருந்தன. நம் கழகம் 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 26 மாவட்ட அளவிலான பூமாலை வணிக வளாகங்களைப் புனரமைத்து, பழுதுநீக்கம் செய்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசிட முதலமைச்சர் உத்தரவிட்டார். தொடர்ந்து, 5 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் அவை புனரமைக்கப்பட்டு, முதலமைச்சரால் திறந்தும் வைக்கப்பட்டன.*

***பூமாலை இனி வளம் கொழிக்கும் பொன் மாலை ஆகும்..!***

**...வலம் வருவோம்**

## வ.உ.சி. போற்றுதும்!





பெரியவர் என மரியாதையோடும், அன்போடும் அழைக்கப்பட்டவர் சுதந்திரப் போராட்டத் தியாகி வ.உ.சிதம்பரம். ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதேசிக் கப்பல் விட்டவர், செக்கு இழுக்கும் கொடும் தண்டனை பெற்றவர் என நாம் அறிந்து வைத்திருப்போம். வ.உ.சிதம்பரம் அவர்களின் அறியப்படாத பக்கமாக அவர் தொழிலாளர்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிய தொழிற்சங்கவாதி என்பதை அறியத் தருகிறது **‘தோழர் வ.உ.சி’** நூல். நீந்தும் மீன்கள் பதிப்பகம் வெளியிட்ட இந்த நூலின் ஆசிரியர் குருசாமி மயில்வாகனன்.

கம்யூனிஸ்ட் ஆதரவாளரைப்போல இந்நூல் ஒரு வகையில் தோன்றினாலும் பன்முகத்தன்மைகள் கொண்ட பெரியவர் வ.உ.சி அவர்களின் அறியப்படாத வாழ்க்கையை தமிழக வாசகர்களுக்குக் காட்டுவதின் மூலம் பொதுவான வாசகர்களுக்குமான நூலாகவும் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

வ.உ.சி அவர்களுக்கும் தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களுக்கும் உள்ள தொடர்பானது தொழிலாளர் வரலாற்றில் குறிப்பிட வேண்டிய பகுதியாகும். தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் அமைப்புகள் தொழிலாளர்கள் பிரச்சினைகளைக் கையில் எடுப்பதற்கு முண்பே, கம்யூனிஸ்ட்டைப்போல, ஆனால் கம்யூனிஸ்ட்டாக இல்லாமல் **‘கோரல்’** மில் தொழிலாளர்களை வ.உ.சி அரவணைத்திருக்கிறார் என்பதைச் சான்றுகளுடன் முன்வைக்கிறது இந்த நூல். தொழிலாளர்களுடன் அவருக்கிருந்த பிணைப்பின் தன்மையில் அவரைத் **‘தோழர்’** என அழைக்க முடியும் என நிறுவுகிறார் ஆசிரியர்.

பெரியவர் வ.உ.சி, சுதேசிக் கப்பலைப் பதிவு செய்த மாதம், இந்த மாதமாகும். அவரின் வாழ்க்கையை அறிய வேண்டியது காலத்தால் அவசியமாகும்.

## :.ப்ளாஷ்பேக்



### தேர்தல் சந்திப்பு!



பஞ்சு

1970-களில் சென்னை அண்ணா சாலையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆயிரம் விளக்குத் தொகுதி வேட்பாளரும் கழகப் பொருளாளருமான ஐயா சாதிக் பாட்சா அவர்களும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் அப்போது உடனிருந்தனர். சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தால், சிறப்பாகத் தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று தலைவர் கலைஞர் அறிவுறுத்தியது இன்றைக்கும் என் நினைவில் நிற்கிறது. அன்று தொடங்கி இன்று வரை ஒரு தேர்தல் தவறாமல் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**-பி. பஞ்சு, பகுதி பிரதிநிதி,**
**ஆயிரம் விளக்கு, சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### சட்ட சேவைகளை உயர்த்திய கழகம்

**1966-இல் சட்டக் கல்லூரியின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் ஒன்று மட்டுமே இருந்தது. இது தி.மு.க.வின் தலைமையின் கீழ், 2010-இல் 8 சட்டக் கல்லூரி களாக அதிகரித்தது. இவற்றில் ஒன்று தனியார் கல்லூரி. இந்த விரிவாக்கம், வழக்கறிஞர்களாக விரும்புபவர்களுக்கு வாய்ப்புகளைத் தருவதோடு, சட்ட சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டை மக்களிடம் மேம்படுத்தியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 274




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131